

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை பழைய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முகாமினை தொடங்கி வைத்தார். உடன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம், ஏ.கே.மணி, பழனிச்சாமி ஆகியோர் இருந்தனர்.



கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி இறந்த 41 பேரின் குடும்பத்தினருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தலா ரூ.50,000த்தை அக்கட்சியின் தலைவரும், எம்.பி.யுமான தொல். திருமாவளவன் வழங்கினார். உடன் கரூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி மற்றும் வி.சி.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### சமுதாயத்தின் இழிநிலையை துடைத்தெறிய தமிழ்நாட்டின் தெருக்களில்

# சாதிப் பெயர்களை அறவே நீக்கிட முதல்வர் எடுக்கும் முயற்சியை பழனிசாமி திரித்துப் பேசுவதா?

## அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

**விருதுநகர், அக்.13-**

**நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விருதுநகர் மாவட்டம், காரியா பட்டி, மல்லாங்கிணறில் செய்தியாளர் களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-**

நம்முடைய தமிழ்நாடு அரசு ஜாதி, மதம், பாலினம், அதிகாரம் போன்றிருக்கக் கூடிய எந்தவொரு காரணத்தாலும், வேறு பாடு இல்லாத எல்லோருக்கும் எல்லாமு மான சமவாய்ப்புகளை கொண்டிரு க்கக்கூடிய நியாயமான ஒரு உயர்வான முன்னேற்றமிக்க சமத்துவ, சமுதாய அமைப்பினை உருவாக்கிடவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமை யிலான இந்த திராவிட மாடல் ஆட்சி சிறப் பான திட்டங்களை உள்கட்டமைப்பு வசதி களை மேம்படுத்துவது மாத்திரம் அல்லா மல், சமூக நலத் திட்டங்களிலும் மிகச் சிறப் பாக செயல்படுத்திக் கொண்டு வருவதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அத்தகைய வேறுபாடுகளற்ற, ஏற்றத் தாழ்வுகளற்ற அல்லது பிறப்பால் ஒருவரை இழிவுபடுத்தக்கூடிய நிலைகளை முற்றிலு மாக மாற்றக்கூடிய அளவில், 1978-ஆம் ஆண்டு நம்முடைய தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தெருப் பெயர்கள், அந்தப் பெயர்களில் இருக்கக்கூடிய பின்னூட்டு களாக இருக்கக்கூடிய சாதிப் பெயர்களை நீக்கக்கூடிய அரசாணைகளை அன் றைக்கு தமிழ்நாடு அரசு வெளியிட்டதும் உங்களுக்குத் தெரியும். அதனைத் தொடர்ந்து, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியை இத்தகைய சமூகநீதியை அடிப் படை நோக்கமாக அடித்தள நோக்கமாக கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதல மைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல இடங்களில் ஆதிக்கத்தின் அடை யாளமாக, தீண்டாமையின் அடையாள மாக கருதப்படக்கூடிய காலனி என்கின்ற அந்த சொல்லை ஒரு கிராமப் பகுதிகளிலோ அல்லது ஒரு குடியிருப்புகளில் இருக்கக்கூ டிய அத்தகைய ஒரு சொல்லை முற்றிலு மாக நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள்.

**சாதிப்பெயர்கள் வேண்டாம் என்பது தவறா?**

அதனைத் தொடர்ந்து நம்முடைய அர சின் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் கூட்டங்கள் ஏற்பாடு செய் யப்பட்டு, இப்படி ஒரு குறிப்பிட்ட பிரிவி னரை, அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சமு தாயத்தின் அடிப்படையில் குறிப்பிட்டு, இழிவுப்படுத்துவதை நீக்கக்கூடிய வகை யில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல் வேறு குடியிருப்புக்கள், தெருக்கள், நீர்நி லைகளில் அத்தகைய பெயர்கள் இடம் பெறுமானால், அவற்றை முற்றிலுமாக நீக்கவேண்டும் என்பதற்கான உரிய வழி காட்டு நெறிமுறைகளை அரசாணையாக அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த அடிப்படையில், மிகச் சிறப்பான வகையில், தமிழ்நாடு அரசு இந்த முன்னெ டுப்பை மேற்கொண்டிருக்கும் போது எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர் கள் தனது பரப்புரைக் கூட்டங்களில் மிக முன்னேறிய நோக்கோடு, சமுதாய விழிப் புணர்வோடு, சமுதாயத்தில் இருக்கக்கூடிய இத்தகைய இழிநிலையை துடைத்தெறிய வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களு டைய உயர்ந்த நோக்கோடு அமைக்கப்பட் டிருக்கக்கூடிய இந்தத் திட்டங்களுக்கு அவர் வேறு வண்ணம் பூச கூடிய அளவில் தங் களுடைய பரப்புரை பயணங்களில் இதை இழிவுபடுத்தி பேசக்கூடிய ஒரு நிலை யினை அவர் மேற்கொண்டிருப்பது முழு மையாக கண்டிக்கத்தக்கது என்பதை நான் தொடக்கத்திலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**அரசியல் இலாபத்திற்காக குறுக்குச்சால் ஓட்டும் பழனிசாமி!**

எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு, அவருடைய மாலை நேர பிரசங்கங்களில் ஏதேனும் ஒரு சப்ஜெக்ட் கிடைக்க வேண் டும் - ஏதாவது ஒன்றைச் சொல்லி தமிழ் நாடு அரசின் மீது அவதூறு பரப்ப வேண் டும் - அதன் மீது அவர் தன்னுடைய கருத்துக்களை திரித்து, திரிபுவாதத்தை மேற்கொண்டு, நல்ல திட்டங்களுக்கும் வேறுவிதமான திரிபு நோக்கங்களைக் கொண்டு வரவேண்டும் என்கின்ற அவரு டைய தணியாத ஆசையின் அடிப்படை யில், அவர் உண்மைகளை திரித்து நாட்டு மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்பி கொண்டிருக்கிறார்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஏதேனும் ஒரு செய்தி இருக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு பழமொழியைச் சொல்வார்கள் - அம்பலம் தீப்பட்டதென்றால், அது அடுத்த கூட்டத்தை அஜண்டாவுக்கு



ஆகும் என்பதைப் போல, ஒரு பிரச்சினை என்றால், அந்த பிரச்சினையை தீர்ப்பது என்பது வேறு அந்த பிரச்சினைக்கு தன்னு டைய பங்களிப்பைத் தந்து அந்த பிரச்சி னைகளை தீர்க்கலாம் - ஒரு நல்ல காரியம் நடக்கிறது என்றால் அதை வரவேற்கலாம் - அதை விட்டுவிட்டு ஒரு விஷயத்தை எடுத் துக் கொண்டு ஒரு இடத்திற்கு போனோம் என்றால், அப்படியானால், அது அடுத்த கூட் டத் தொடருக்கான அஜண்டாவாக நாம் வைத்துக் கொள்ளலாம் என்று அவற்றில் அரசியல் லாபத்திற்காக குறுக்குச்சால் ஓட் டுவதை நம்முடைய எதிர்க் கட்சித் தலை வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வாடிக் கையாக கொண்டிருக்கிறார்கள்.

எனவேதான், இந்த சாதி பெயர்களை, சாதிப் பெயரில் உள்ளடக்கி இருக்கக்கூடிய பின்னூட்டுக்களாக இருக்கக்கூடிய தெருக் களாக இருந்தாலும், குடியிருப்புகளாக இருந்தாலும், நீர் நிலைகள் போன்று இருக் கக்கூடிய உள்கட்டமைப்புகளாக இருந்தா லும், தமிழ்நாட்டினுடைய எந்த பகுதியாக இருந்தாலும், அவற்றை அறவே ஒழித்திட வேண்டும் - அவற்றை நீக்கிட வேண்டும் என்று ஒரு உயர்ந்த நோக்கோடு நம்மு டைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை அவர் சிறுமைப்படுத்தி பேசுவதை இப்போது வழக்கமாக வைத்திருக்கிறார்.

இன்னும் ஒரு படி மேலே போய் சொல் கிறார் - ஏன் இவர்கள் பெயரை எல்லாம் வைக்க கூடாது என்று சில அரசியல் கட்சித் தலைவர்களுடைய பெயரும் கேட்கிறார். அரசாணை வெளியிடுகிறபோது, குறிப்பிட்ட பெயர்கள் என்று இந்த பெயர்கள் தான் வைக்க வேண்டும் என்று அரசாணையில் குறிப்பிடவில்லை - அரசு இணைப்பு எண் 1A-ல் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறது. எடுத்துக்காட்டான பெயர் பட்டியலை அவர் கள் தந்திருக்கிறார்கள். இந்த எடுத்துக்காட் டான பெயர் பட்டியலை என்பது, இந்தெந்த பெயர்கள் போன்ற பெயர்களை நீங்கள் வைக்கலாம் - மலர்கள் என்கின்ற பெயர் களை எடுத்துக் கொண்டால், இந்த மலர் களை போன்ற பெயர்களை வைக்கலாம் - உதராணமாக, அது செம்பருத்தியாக இருந்தாலும், ரோஜாவாக இருந்தாலும், மல்லியாக இருந்தாலும், சூரியகாந்தியாக இருந்தாலும், இவை போன்ற மலர்களின் பொதுப் பெயர்களை வைக்கலாம் - அது போல நாட்டுக்கு உழைத்த உத்தமர்கள், தியாக தலைவர்கள், தமிழ்நாட்டின் உரி மைக்காக போராடி தலைவர்கள் - அப்படிப் பட்ட தலைவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு இத்தகைய தலைவர்கள் போன் றவர்களுடைய பெயரை எல்லாம் நீங்கள் வைக்கலாம் - இந்த அடிப்படையில், அது ஒரு எடுத்துக்கான பட்டியலாக கொடுக்கப் பட்டிருக்கிறது - அந்த பட்டியலில் இருப்பவர் கள் மட்டும் தான் கொடுக்க வேண்டும் என் கின்ற நிலைமை அல்ல.

**பொதுப்பெயர்களை வைத்திட வழிகாட்டும் நெறிமுறை!**

எனவே, இதுபோன்ற அந்தந்த ஊர்க ளில் இருக்கக்கூடியவர்கள் - அந்தந்த பகு திகளில் இருக்கக்கூடிய ஒரு பொதுத் தன்மை உடையவர்கள் - பாடுபட்ட தலைவர்களாக இருந்தாலும் சரி மலர்க ளைப் போன்று ஒரு பொதுப் பெயராக இருந்தாலும், அத்தகைய பெயர்களில் பழைய பெயர்கள் மாற்றப்பட்டு, புதுப் பெயர்கள் வைக்கப்படும் என்று சொன் னால் அந்த பெயர்களை வைத்து பிறகு, அந்த வழிகாட்டி நெறிமுறைகளின்படி 21 நாட்களுக்குள்ளாக அங்கே இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகள், மற்ற அமைப்புக் கள், அவற்றில் குறிப்பிட்டிருக்கின்ற பரிந்து ரைகளை அளித்து அவற்றின் மீது ஏதே னும் ஆட்சேபனைகள் இருக்குமானால் 21 நாட்களுக்கு முன்பாக தெரிவிக்கப்பட்ட பிறகு நம்முடைய அரசுக்கு அது உரிய முன்மொழிவுகளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகளில் தெரிந் திருக்க வேண்டும்.

எனவே, இதையெல்லாம் தெரிந்து கொண்டே வேண்டுமென்றே குறிப்பிட்ட சில தலைவர்கள் எல்லாம் விடுத்து, உங் கள் கட்சியின் தலைவர்கள் பெயர்களை மட்டும் தான் நீங்கள் வைத்துக் கொள்கிறீர் கள் என்று அவர்கள் சொல்வது என்பது முற்றிலும் தவறானது. அந்த பிரச்சாரம் என்பது முற்றிலும் கற்பனையின் அடிப்ப டையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், எந்த ஒரு நல்ல நோக்கத்திற் காக இது செய்யப்படுகிறதோ, அந்த நல்ல நோக்கத்தின் அந்த நன்நம்பிக்கை முதல மைச்சர் அவருக்கும், இந்த ஆட்சிக்கும் கிடைத்துவிடக் கூடாது என்கின்ற எண் ணத்தில் தான் இத்தகைய பரப்புரைகளை எடப்பாடி பழனிசாமி அவர்கள் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அதே வரிசையில் தான் அண்மையில், கோவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக திறந்து வைத்திருக்கக்கூடிய தமிழ்நாட்டில் மிக நீளமான 10 கிலோ மீட்டருக்கு மேலே இருக்கக்கூடிய ஒரு உயர்மட்ட பாலத்திற்கு, புகழ்பெற்ற விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர் களுடைய பெயரை வைத்திருப்பதையும் அவர் குறையாக சொல்கிறார். ஜி.டி நாயுடு யார்? ஒரு மிகப் பெரிய விஞ்ஞானி. அந்த பகுதியிலேயே அவர் குடியிருந்தவர். எனவே, அந்தச் சாலைக்கு அவருடைய பெயரை கோவை மாவட்டத்தின் மக்களுக் காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் நாட்டு மக்களுக்கும் ஒரு மாபெரும் அடையாள மாக, ஒரு விஞ்ஞானியாக விளங்கிய அவர், அவருடைய பெயர் சூட்டுவது என் பது சாலப்பொருத்தமாக இருக்கும் என்ற வகையில் தான் அவருடைய பெயரை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சூட்டி, அதை பலதரப்பட்ட மக்களால் அங்கே வர வேற்றிருக்கிறார்கள்.

**எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் பழனிசாமி!**

இப்பொழுது அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டால், ஜி.டி.நாயுடு பெயரில் நாயுடு என்று இருக்கிறது என்று சொன் னால், அவருக்கு வெறும் ஜிடி பாலம் என்றா அழைக்கமுடியும்? அந்த பாலத் திற்கு ஜி.டி.நாயுடு பாலம் என்று வைக்கும் பொழுதுதான் அவர் இன்னார் என்று அறி யப்படுகிறார். தமிழ்நாட்டில்கூட பல்வேறு தெருக்களுக்கு அந்தக் காலத்தில் கூட, திரா விட இயக்கத்தில் ஒருவராக இருந்த தலை வர் ஒருவராக இருந்த டி.எம் நாயர் அவர் கள் - டி.எம்.நாயர் என்கின்ற பெயரில் நாயர் என்கின்ற சமுதாய பின்னூட்டு பெயர் இருக்கின்ற காரணத்தால், நாயர் என்று எடுத்துவிட்டால் வெறும் டி.எம். என்று இருந்தால், அது எவ்வாறு சரியாக இருக்கும்? எனவே, அவற்றை குறிப்பிட்ட போது அவர் எவ்வாறு அறியப்பட்டாரோ, அந்த தலைவர்களை குறித்து வரக்கூடிய சந்ததியினர் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தான், அவைகள் விதிவிலக்கு களாக அதை கருதப்பட்டு வரவேண்டும் என்பது நடைமுறையே தவிர, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், இன்னும் இன்னும் சிலரும் கூட என்னவென்று தெரியாமல் இவர் பெயர் வைக்க கூடாது - வேறு பெயர் வைக்க வேண்டுமென்று இவற்றிற்கு கூடே நின்று குறுக்குச்சால் ஓட்டி அதில் அர சியல் இலாபம் பார்க்கும் இயல்வது என்பது மெத்தமும் கண்டிக்கத்தக்க ஒன்று. எனவே, "எதைத் தின்றால் பித்தம் தெளி யும்" என்கின்ற நிலையில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவரும், அந்த நிலையை பின்பற்றிருக்கக்கூடிய வேறு சில அரசியல் கட்சித் தலைவர்களும் இதனுடைய உண்மை நிலையை உணர்ந்து தமிழ் நாடு அரசு எந்த நோக்கத்திற்காக இந்த அர சாணை வெளியிட்டு இருக்கிறது.

அதை போல், ஜி.டி.நாயுடு அவர்களு டைய பெயர் எந்த நோக்கத்திற்காக சூட்டப் பட்டு இருக்கிறது - அது விதிவிலக்குகளாக அந்தப் பெயர் சூட்டப்பட்டால்தான், எந்த தலைவர் என்பது குறிப்பேட்டில் அந்தப் பெயரை எடுத்துவிட்டு வெறும் பெயரில் ஜி.டி. என்று பெயரில் வைத்தால் யாருக்கு அது தெரியும் - அதைப்போல ஒருவர் பெயர் மட்டும் இருந்தால், அந்த பொதுப் பெயரில் இருக்கக்கூடிய ஏராளமான பெயர் கள் இருக்கக்கூடிய ஒரு சிலர் இருக்கும் போது அதை யாரை குறிக்கும் என்பதை அதற்கான தெளிவு பிறக்காது என்கின்ற வகையில்தான் இந்த பாலத்திற்கு சரியான வகையில், முறையான வகையில் அந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

சமூகநீதியின் அடிப்படைப் பயணம்!

எனவே, நான் இறுதியாக சொல்வது, இந்த ஒட்டுமொத்தமான சாதிப் பெயர்களை நீக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களின் திட்டம் என்பது சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், அதில் இருக்கக் கூடிய எத்தகைய மாறுபாடுகளாக இருந்தா லும் அது செல்வம் குறித்த மாறுபாடுகளாக இருந்தாலும், சமுதாயத்தின் படிநிலைக ளில் இருக்கக்கூடிய, அடுக்குகளில் இருக் கக்கூடிய இத்தகைய சாதி நிலைகளின் காரணமாக அவர்கள் இழித்துரைக்கப் பட்டு, அதனுடைய படிநிலைகளில் அவர்க ளுக்கு இழைக்கக்கூடிய அநீதிகளாக இருந் தாலும், அவற்றையெல்லாம் முற்றிலுமாக நீக்கக்கூடிய ஒரு சமத்துவ, சமதர்ம, சமுதா யத்தை நோக்கிய ஒரு சமூக நீதியின் அடிப் படை பயணமாக இது அமைந்திருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

---

### சிவகங்கை முதல் நகர்மன்ற தலைவர் -

# கழக முன்னோடி சொ.லெ. சாத்தையா மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி

*சிவகங்கை,அக். 13-*

*சிவகங்கை மாவட்டம் சிவகங்கை முதல் நகர் மன்ற தலைவர் - கழக முன்னோடி சொ.லெ.சாத்தையா அவர்கள் (வயது 90) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*சிவகங்கை நகராட்சி யின் முதல் நகர் மன்ற தலை வராக சொ.லெ.சாத்தையா மக்கள் ஆதரவுடன் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.இவர் கழகத்தின் மூத்த முன்னோடி ஆவார் .இவர் நகர்மன்ற தலைவ ராக பொறுப்பு வகித்த காலத்தில் சிவகங்கை நகரில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போதைய முதல்வர் தலைவர் கலை ஞரை நேரில் சந்தித்து மானாமதுரை தாலுகா இடைக்காட்டூர் வைகை ஆற்றில் இருந்து சிவகங்கை நகர் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டும்*



*என்று கோரிக்கை வைத் தார். அவரது கோரிக்கையை ஏற்று முதல்வர் தலைவர் கலைஞர் சிவகங்கை நக ருக்கு இடைக்காட்டூரிலி ருந்து பாதுகாக்கப்பட்ட வைகை தண்ணீர் வழங்கி னார். சிவகங்கை மக்களின் தாகம் தீர்த்த தலைவர் என்று அழைக்கப்பட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு கழக இளைஞரணி செயலாளர் துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கையில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டபோது*

*கழக மூத்த முன்னோடி சாத்தையாவை அவரது இல் லத்தில் சந்தித்து உடல் நலம் விசாரித்து அவரிடம் வாழ்த் துப் பெற்றார்.*

*சாத்தையாவிடம் அவர் கட்சிக்காக ஆற்றிய பணி கள், சிறை சென்ற அனுப வங்களை கேட்டறிந்தார். சொ.லெ.சாத்தையா வயது முதிர்வால் நேற்று காலை மறைவெய்தினார். இவரது மனைவி லீலாவதி கடந்த மே மாதம் மறைவெய்தி னார். சாத்தையாவிற்கு ஒரு மகன் மூன்று மகள்கள் உள் ளார்கள். சொ.லெ.சாத் தையா அவைத்தலைவராக வும், செயற்குழு உறுப்பின ராகவும் நகர் மன்ற தலை வராகவும் பதவி வகித்துள் ளார் . பேரறிஞர் அண்ணா, முதல்வர் தலைவர் கலை ஞர் பேராசிரியர் கழகத் தலைவர் முதல்வர் தளபதி, சிறுகதை மன்னன் எஸ். எஸ்.தென்னரசு, பசும் பொன் தா.கிருட்டிணன், காரைக் குடி சித.சிதம்பரம் மற்றும் கழக முன்னோடி களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த சிவ கங்கை மாவட்டத்தில் கழ கத்தின் வளர்ச்சிக்காக அய ராது பணியாற்றியவர் .*

*மறைந்த சாத்தையாவின் உடலுக்கு மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம். துரை.ஆனந்த், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பி னர்கள் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் மலர்மாலை வைத்து அஞ் சலி செலுத்தினார்கள்.*

*சொ.லெ.சாத்தையா. வின் இறுதிச் சடங்கு இன்று திங்கட்கிழமை காலை 11மணிக்கு சிவகங்கையில் அவரது இல்லத்தில் நடை பெறுகிறது.*

---

### காவேரிப்பாக்கம் அருகே கிராம சபைக் கூட்டம்!

# மகளிர் குழுவினருக்கு ரூ.96.5 லட்சம் கடன் உதவி!

## அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்!

*இராணிப்பேட்டை, அக். 13 -*

*இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக் கம் அருகே நடந்த கிராம சபா கூட்டத்தில் மகளிர் குழுவினருக்கு ரூ.96.5 லட் சம் கடன் உதவியை கைத் தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்.*

*தமிழ்நாடு முழுவதும் காந்தி ஜெயந்தியை யொட்டி சிறப்பு கிராம சபா கூட்டம் நடத்தப்பட் டது. இந்த கூட்டங்களில் கிராம பகுதிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து கிராம மக்களிடம் கருத்து கேட்டு அது தொடர்பான நடவ டிக்கை எடுக்கப்படுகிறது. இதே போல் இராணிப் பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அருகே உள்ள வாலாஜா ஊராட்சி ஒன்றியம் கடப்பேரி ஊராட்சி ராமாபுரம் கிரா மத்தில் கிராம சபை கூட்டம் நடந்தது . கூட் டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். கலெக்டர்ஜே.யு.சந்திர கலா, டி.ஆர்.ஓ தனலிங்கம், திட்ட இயக்குனர் சரண்யா தேவி ஒன்றிய குழு தலை வர் சேஷா வெங்கட்ரம ணன் ஆகியோர் முன் னிலை வகித்தனர் .*

*பி.டி.ஓ .ரஹமத் பாஷா அனைவரையும் வரவேற்று பேசினார்.*

*இதில்சிறப்பு அழைப் பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி கலந்துகொண்டு பொதுமக்களுடன் அமர்ந்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் உரையாற் றிய நிகழ்ச்சியை பார்வை யிட்டார் .அதையடுத்து ஊராட்சி செயலாளர் ராஜ் குமார் ஆண்டறிக்கை வாசித்தார். அப்போது தெருக்கள், சாலைகள், நீர் நிலைகள் மற்றும் பிற பொது கட்டமைப்பு போன்றவற்றின் பெயரை மாற்றுதல் குறித்து கிராம சபை கூட்டத்தில் வாதிக் கப்பட்டு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இது தவிர சாலைகள் அமைப் பது மற்றும் பேருந்து தேவைகள் குறித்தும் விவா திக்கப்பட்டன .*

*தோட்டக்கலை துறை சார்பில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பூச்சி மேலாண்மை பெட்டகங் கங்கள் தூய்மை பணியா ளர்களுக்கு நலவாரிய அட்டை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.96.5 லட்சம் மதிப்பீட் டில் வங்கி கடன் உதவிகள் ஆகியவற்றை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார். கடப்பேரி பகுதியில் மேம் பாலம் வந்த பிறகு அரசு மற்றும் தனியார் பஸ்கள் மேம்பாலத்தின் மீது செல் வதால் சிரமம் ஏற்படுவ தாக பொதுமக்கள் மனு அளித்தனர். இதேபோல் சீரான சாலை வசதி, மழை நீர் கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கேட் டும் மனுக்கள் வழங்கப் பட்டன. மனுக்களை பெற் றுக்கொண்ட அமைச்சர் ஆர்.காந்தி விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். கூட்டத் தில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந் திரன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் , கழக நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.*

*முடிவில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அரசி நன்றி கூறினார்.*